செ.வெ.எண்-26 நாள்-14.02.2018

**அரியலூர் மாவட்டம், ஜெ.தத்தனூர் ஊராட்சியில் வளர்ச்சிப் பணிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.க.லட்சுமி பிரியா, இ.ஆ.ப., அவர்கள் நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார்கள்.**

அரியலூர் மாவட்டம், ஜெயங்கொண்டம் ஊராட்சி ஒன்றியம், ஜெ.தத்தனூர் ஊராட்சியில் மாவட்ட ஆட்சித்தலைவர் **திருமதி.க.லட்சுமி பிரியா, இ.ஆ.ப.,** அவர்கள் வளர்ச்சிப்பணிகளை பார்வையிட்டு, ஆய்வு செய்தார்கள்.

ஜெ.தத்தனூர் ஊராட்சியில் தாய்திட்டத்தின்கீழ் 2016-17-ல் ரூ.30 இலட்சம் மதிப்பில் அம்மா பார்க் மற்றும் அம்மா உடற்பயிற்சி நிலையம் அமைக்கப்பட்டுள்ளதை மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார்கள்.

இந்த ஆய்வின்போது, குழந்தைகள் விளையாடும் இடத்தை தூய்மைப்படுத்தி பராமரிக்க வேண்டும் எனவும், பூப்பந்து விளையாட்டு இடம் அமைய உள்ள இடத்தில், மேலும் மேம்பாட்டு பணிகளை மேற்கொள்ள வேண்டும் எனவும், மரக்கன்றுகளை நட்டு பராமரிக்க வேண்டும் எனவும் மாவட்ட ஆட்சியர் அவர்கள் சம்மந்தப்பட்ட அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார்கள்.

பின்னர், ஜெ.தத்தனூர் ஊராட்சி, த.பொட்டக்கொல்லை ஊராட்சி ஒன்றிய துவக்கப்பள்ளியில் ஆய்வு செய்த மாவட்ட ஆட்சியர் அவர்கள், மாணவ, மாணவியர்களின் கல்வித் தரம் குறித்து நேரில் கேட்டறிந்து ஆய்வு செய்தார்கள்.

. மேலும், சத்துணவு கூடத்தில் ஆய்வு செய்து, உணவு பொருட்களின் இருப்பு மற்றும் சத்துணவின் தரம் குறித்து மாவட்ட ஆட்சித்தலைவர் **திருமதி.க.லட்சுமி பிரியா, இ.ஆ.ப.,** அவர்கள் பார்வையிட்டு, ஆய்வு மேற்கொண்டார்கள்.

இந்த ஆய்வின்போது, செயற்பொறியாளர் (ஊரக வளர்ச்சி) ஹரிகிருஷ்ணன், உதவி செயற்பொறியாளர் பவுன்ராஜ், ஒன்றிய பொறியாளர் ராஜா சிதம்பரம், வட்டார வளர்ச்சி அலுவலர்கள் அமிர்தலிங்கம், குருநாதன் மற்றும் அலுவலர்கள் கலந்துகொண்டனர்.

செய்தி வெளியீடு:- செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், அரியலூர்.